**டவர் மண்டப திரையரங்கு மன்றம் - 2015**

---

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 01 ஆம் இலக்க டவர் மண்டப திரையரங்கு மன்ற அதிகாரச்சட்டத்தின் 12 (4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணத்தால் ரூபா 108,055,536 கிரயமான 12 நிலையான சொத்து விடயங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பாவனைக்குட்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்திற்கு சொந்தமான கட்டிடம் 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 200 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததெனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணிப்பீட்டு வழு காரணமாக மீளாய்வாண்டின் கட்டிட பெறுமானத்தேய்வு ரூபா 408,585 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நன்கொடை – பணம் | 18,577,319 | உரிய பதிவேடுகள் மற்றும் நன்கொடை பட்டோலைகள் |
| நன்கொடை – பொருள் | 58,890,541 | |
| ஜப்பான் அரசின் உபகரண நன்கொடை | 16,072,000 | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 678,635 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒலிப்பதிவுக்கூட சேவைகளை வழங்குவதற்காக இரு அரச நிறுவனங்களிடமிருந்து ரூபா 25,735 தொகையும், 5 வெளி நபர்களிடமிருந்து ரூபா 56,580 தொகையுமாக 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 82,315 கூட்டுத்தொகையான பணத்தை அறவிடுவதற்கு 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட வெளிநபரொருவருக்கும் மன்றத்தின் உத்தியோகத்தரொருவருக்கும் முறையே வழங்கிய ரூபா 25,000 மற்றும் ரூபா 51,007 தொகையான இரு முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 10 நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடை கூலி ரூபா 432,961 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) டவர் மண்டபத் திரையரங்கின் நவீனமயப்படுத்தல் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 05 வருடங்களை அண்மிய காலம் கடந்திருந்ததெனினும், அதற்காக மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்திற்கு செலுத்த வேண்டியுள்ள 2010 ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 1,639,113 தொகையினை தீர்ப்பதற்கு 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மன்றத்தினால் நிலையான வைப்புக்களில் ரூபா 111,091,428 தொகையும் ஏழுநாள் அழைப்பு வைப்புக்களில் ரூபா 13,502,000 தொகையும் முதலீடு செய்வதற்கு நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | திரையரங்கின் முகாமையாளர் பதவியில் ஒரு உத்தியோகத்தர் 07 வருடங்களாகவும், மேலுமொரு உத்தியோகத்தர் 3 வருடங்களாகவும் பதிற்கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 164,415 மற்றும் ரூபா 123,240 பதிற்கடமைப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.5 ஆம் பந்தி | திரையரங்க மன்றத்தின் பணிப்பாளரின் (நடனம், மேம்படுத்தல், கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டம்) உத்தியோகபூர்வ வாகனமொன்றும் அதற்காக எரிபொருள் படிகளாக 2015 சனவரி முதல் 2015 மே மாதம் வரையிலும் ரூபா 86,500 தொகையும், 2014 ஆம் ஆண்டில் ரூபா 268,800 தொகையும் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 12,050,421 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,681,847 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 631,426 இனால் குறைவடைந்திருந்தது. மொத்த வருமானம் ரூபா 2,173,513 இனால் குறைவடைந்திருந்தெனினும், மொத்த செலவினம் ரூபா 2,804,939 இனால் குறைவடைந்தமையால் பற்றாக்குறையில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 25,614,800 தொகையான பங்களிப்பு அதிகரிப்புடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 31,686,747 ஆகும்.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தேசிய கலை நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல், திரையரங்கு பற்றிய அறிவு, அறிந்து கொள்ளல் மற்றும் அதன் பாவனையை அதிகரித்தலும் அபிவிருத்தி செய்தலும், திரையரங்கு நாடக கலைஞர்களுக்கும் கைப்பணியாளர்களுக்கும் பண உதவிகள் செய்தல் மற்றும் நாடக கலைஞர்களின் பயிற்சிகளுக்கு உதவுதல், பாடல் நாடகம், நடன நாடகம் மற்றும் இசையமைப்பு மற்றும் அது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை அரங்கேற்றல், சபை தகுதியானவையென கருதும் செயற்பாடுகளுக்காக டவர் மண்டப திரையரங்கினை தேசிய சின்னமாக கொள்ளல், பாதுகாத்தல், நடாத்திச் செல்லல் மற்றும் பாவனைக்கு எடுத்தல் என்பன மன்றத்தின் பிரதான நோக்கங்களாகும்.

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்த நோக்கங்களின் கீழ் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட 28 செயற்பாடுகளுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 14 செயற்பாடுகள்

நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் போது, ருக்மணி தேவி திரையரங்கின் வருமானம் ரூபா 408,840 ஆகக் காணப்பட்ட போதிலும் ஊழியர்களின் சம்பளச் செலவினம் ரூபா 1,574,286 தொகையாக இருந்தது. கடந்த 05 வருட காலப்பகுதியினுள் அதன் பராமரிப்புச் செலவினத்தையேனும் மேவுகைசெய்யக்கூடிய வகையில் அவ் வருமானத்தை அதிகரிப்பதற்கு மன்றம் தவறியிருந்தது.

(ஆ) (i) டவர் மண்டப திரையரங்கு மன்றத்தினால் நூர்த்தி பாடல் பேணுகைக்காக தயாரிக்கப்பட்ட இறுவட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதுடன் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளினுள் தயாரிக்கப்பட்ட இறுவட்டுக்கள் / புத்தகங்களுக்கான உற்பத்திக் கிரயம் ரூபா 2,901,126 ஆக இருந்த போதிலும் அந்தக் காலப்பகுதியினுள் இறுவட்டுக்கள் / புத்தகங்களின் விற்பனை வருமானம் ரூபா 481,944 ஆகும். அந்தக் காலப்பகுதியினுள் வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் ரூபா 2,419,182 இனால் விஞ்சியிருந்ததுடன், ஆகக் குறைந்தது உற்பத்திச் செலவினத்தை தீர்ப்பதற்கேனும் இயலுமான வகையில் இறுவெட்டுக்களை விற்பனை செய்வதற்காக விற்பனை மேம்படுத்தல் நடைமுறையொன்று மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட 25 வகையான இறுவட்டுக்களில் 13 வகையான இறுவட்டுக்களுக்குரிய 10,160 அலகுகளில் 6,814 அலகுகளை விற்பனை செய்ய முடியாமல் மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்தது.

(இ) அரங்கேற்றக் கலைஞர்களுக்கான சனாதிபதி நலன்புரி நிதியத்தின் கட்டுப்பாட்டிற்காக டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் பொறுப்புச் சபைக்கு பொறுப்புக்கூற வேண்டிய முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட்டிருந்ததெனினும், 2011 ஆகஸ்ட் 29 ஆந் திகதியின் பின்னர் அதனூடாக நலன்புரி நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் எதுவித தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு உத்தியோகத்தரொருவரை இணைத்துக்கொள்வதற்கு 05 பத்திரிக்கைகளில் விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு ரூபா 163,736 செலவிடப்பட்டு 2015 சனவரி 21 ஆந் திகதி கோரப்பட்ட விண்ணப்பங்களில் 15 பேர் விண்ணப்பித்திருந்த போதிலும், அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்காமல் 2015 யூலை 02 ஆந் திகதி நிர்வாக சபையின் தலைவரால் அந்தப் பதவிக்கு அதற்குப் புறம்பாக நபரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) மன்றத்தின் முன்னாள் சிரேஷ்ட முகாமையாளர் (ஆளணி நிர்வாகம்) 2010 பெப்ரவரி 12 ஆந் திகதி அசாதாரணமான மற்றும் அநீதியான முறையில் சேவையை முடிவுறுத்தியமையின் காரணமாக தொடுக்கப்பட்டிருந்த வழக்கிற்கு ரூபா 257,160 தொகையான நட்டஈடொன்றும், 2009 நவம்பர் 04 ஆந் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்ட கணக்காளரால் தொடுக்கப்பட்ட வழக்கினை முடிவுக்கு கொண்டு

வருவதற்கு ரூபா 500,000 தொகையும் மீளாய்வாண்டில் மன்றத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உயர் மட்ட முகாமைத்துவத்தினால் ஊழியர்களை பதவி நீக்கியமை நியாயமான முறையில் இடம்பெற்றதை உறுதிப்படுத்த முடியாமையால் இரண்டு ஊழியர்களுக்கு ரூபா 757,160 தொகையை நட்டஈடாக செலுத்த நேர்ந்திருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்**

என்பின்ஸ்டன் திரையரங்கினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னர் 2015 பெப்ரவரி அளவில் ஒரு கம்பனியிடமிருந்து ரூபா 12,768,000 பெறுமதியான 700 இருக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதில் 80 சதவீதமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருக்கைகளை பொருத்தியதன் பின்னர் உரிய தரத்திற்கமைய உள்ளதா என்பதை பரிசோதனை செய்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்காததுடன், அந்த இருக்கைகள் 2016 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்கப்படாமல் இருந்தன.

**4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

என்பின்ஸ்டன் திரையரங்கினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 50,298,221 தொகையான மூலதன மானியத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 17 மில்லியன் எஞ்சியிருந்தது.

**4.6 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறை**

(அ) என்பின்ஸ்டன் திரையரங்கிற்காக ரூபா 42,136,294 செலவிடப்பட்டு வாயு சீராக்கி முறைமையொன்றினை கொள்வனவு செய்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூறுவிலைகள் கோரப்பட்டு கேள்வியினை கையளிப்பதற்கு 10 மாதங்கள் கடந்திருந்தது.

(ii) மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 30 மில்லியனை விஞ்சி ரூபா 12,136,294 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) கூறுவிலை கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட 2 நிபந்தனைகளும் அதன் பின்னரான சந்தர்ப்பமொன்றில் கொள்வனவு குழுவினால் அகற்றப்பட்டமையால் தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் ரூபா 8,906,090 விலை குறைத்து விநியோகித்திருந்த போதிலும், அந்த நிபந்தனைகளை நீக்கிய பின்னர் ஏனைய கேள்விதாரர்களின் விலைமனுக்கள் மீள் பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டுமெனினும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) இந்த இயந்திரத்தின் பராமரிப்பு சேவைகள் செலவினம் மற்றும் செலவிட வேண்டி ஏற்படும் ஏனைய கிரயங்களை கருத்திற் கொள்ளாமல் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) எல்பின்ஸ்டன் திரையரங்கத்தின் நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த செயற்திட்டத்திற்காக தேவையான மொத்தப் பொருட்கள் மற்றும் ஆளணிக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து உழைப்பு

வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் ஊழியர்களை வழங்கியமைக்காக 2012 மே 31 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 47,338 மனித நாட்களுக்காக ரூபா 21,302,100 செலுத்தப்பட்டிருந்தது.

(iii) உள்ளக மின்சார கம்பிகளை இழுத்தல், கதவுகளைத் தயாரிப்பதற்காக மரக்குற்றிகளை கொள்வனவு செய்தல், இருக்கைகளைப் பொருத்துதல், மேடை ஒளியூட்டல் மற்றும் ஒளிக் கட்டமைப்பினை பொருத்துதல் போன்ற உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளுக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,432,882 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததெனினும், ஒப்பந்தம் செய்யப்பட்ட பணிகள் கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 28 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 91 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 61 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 30 ஆகும். அந்த வெற்றிடங்களுள் பணிப்பாளர் நிதி, உள்ளகக் கணக்காய்வாளர், கணக்கு உதவியாளர் மற்றும் சிரேஷ்ட ஒலிக் கட்டுப்பாட்டாளர் பதவிகள் 01 வீதமும் ருக்மணிதேவி மற்றும் என்பின்ஸ்டன் திரையரங்கம் ஆகியவற்றில் முகாமையாளர் பதவிகள் 02 உம் வெற்றிடங்களாக காணப்பட்டமையால் அந்தப் பிரிவுகளின் செயற்படுதன்மை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 60 வயதினைக் கடந்த உத்தியோகத்தரொருவர் மீள சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 60 வயதிற்கு மேற்பட்ட உத்தியோகத்தரொருவர் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015 யூலை 02 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தார்.

**4.8 வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மன்றத்தின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள் வெளிநபர்களுக்கோ வரிசை அமைச்சின் பயன்பாட்டிற்கோ வழங்கப்பட கூடாதெனினும், அந்தச் சுற்றறிக்கைக்கு முரணாக 2015 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களினுள் 7,095 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக 04 வாகனங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வரிசை அமைச்சிற்கும் இரண்டு அரச நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும்,

நிதிக்கூற்றுக்கள் 3 ½ மாத காலதாமதத்தின் பின்னர் 2016 யூன் 16 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டினை உள்ளடக்கும் விதத்தில் மன்றத்தினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளுக்கான பொறுப்புக்களை ஒப்படைக்கும் உத்தியோகத்தர் குறிப்பாக அறிவிக்கப்பட வேண்டுமெனினும், மன்றத்தின் செயன்நடவடிக்கைத் திட்டம் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிடையே கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவப் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 உள்ளகக் கணக்காய்வு**

மன்றத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளை நிரப்புவதற்காக 2011 யூலை 20 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அத்திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் அந்தப் பதவியினை நிரப்புவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராததுடன் வரிசை அமைச்சினாலும் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகளின் நலிவுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | சில கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்படாமை மற்றும் அவை பெறுமானத்தேய்விடப்படாமை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் நீண்ட காலமாக சில பதவிகளுக்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை. |
| (இ) கொள்வனவு | (i) உரிய திட்டமொன்றில்லாமல் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் அவற்றின் மீது தேவையற்ற செலவினங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்றமை.<br>(ii) கொள்வனவு நடைமுறைகளுக்கு முரணாக செயற்படல்.<br>(iii) கட்டுமானம் மற்றும் நவீனமயப்படுத்தல் பணிகள் குறித்த காலச் சட்டகத்தினுள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டிராமை. |
| (ஈ) நிதியங்களின் முகாமைத்துவம் | உரிய திட்டமொன்றில்லாமல் திறைசேரியின் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று அந்த பணத்தை எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்கு ஈடுபடுத்தாமல் விளைவற்ற முதலீடுகளில் ஈடுபடுத்தியிருந்தமை. |